அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 12** |
| **சுட்டெண்:** | |

## பகுதி – 1

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடி இடுக.**

1. உலகின் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் மொழி
   - ☐ தமிழ்
   - ☐ ஆங்கிலம்
   - ☐ டொச்சு

2. பனைமரத்தின் பயன்களுள் ஒன்று
   - ☐ தேங்காய்
   - ☐ நுங்கு
   - ☐ பாக்கு

3. தண்மை + நீர் என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்
   - ☐ தண்மைநீர்
   - ☐ தண்நீர்
   - ☐ தண்ணீர்

4. அழகு, இனிப்பு, வட்டம் என்பன
   - ☐ தொழிற்பெயர்கள்
   - ☐ சினைப்பெயர்கள்
   - ☐ குணப்பெயர்கள்

5. உச்சியில் முடி வைத்த அரசிக்கு உடம்பெல்லாம் கண். அது
   - ☐ அகப்பை
   - ☐ தேங்காய்
   - ☐ அன்னாசி

6. தமிழ்நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்
   - ☐ முப்பது
   - ☐ இருநூற்றுப்பதினாறு
   - ☐ இருநூற்றுநாற்பத்தேழு

7. உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கைச்சொல்
   - ☐ ஓடினேன்
   - ☐ பாடின
   - ☐ மீட்டுகிறாள்

8. ஆழி என்பதன் ஒத்தபொருட்சொல்
   - ☐ வானம்
   - ☐ கடல்
   - ☐ மலை

9. குழந்தையை உறங்கவைக்கப் பாடப்படும் பாடல்
   - ☐ தொழிற்பாடல்
   - ☐ சாய்ந்தாடுப்பாடல்
   - ☐ தாலாட்டுப்பாடல்

10. உங்கள் அம்மம்மாவின் தாயார் உங்களுக்கு
    - ☐ பெரியம்மா
    - ☐ மாமி
    - ☐ பூட்டி

11. ஈழத்தில் உரிமை மீட்புக்காக உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தவர்களுள் ஒருவர்
    - ☐ திலீபன்
    - ☐ சங்கர்
    - ☐ மில்லர்

12. செழிப்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    - ☐ களிப்பு
    - ☐ வளமை
    - ☐ வறட்சி

13. மெய், கண், மூக்கு, வாய், செவி என்பன

☐ ஐம்புலன் ☐ ஐம்பொறி ☐ ஐம்பூதம்

14. புதிதாகத் தோன்றும் இலையின் பருவம்

☐ கொழுந்து ☐ பழுப்பு ☐ சருகு

15. நாங்கள் மலையில் ஏறி பனியில் சறுக்கினோம். இச்சொல்லியம்

☐ தொடர்ச்சொல்லியம் ☐ தனிச்சொல்லியம் ☐ சொல்லியம் இல்லை

(15X1=15 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| ஈகம் | குறுகுறு | சுற்றம் |
| ஏனென்றால் | பச்சைப்பசேல் | சீரும் சிறப்புமாக |

1. மரங்கள் கோடைகாலத்தில் ____________________ எனக் காட்சியளிக்கும்.

2. குற்றம் பார்க்கின் ____________________ இல்லை.

3. எல்லாளமன்னன் ____________________ ஆட்சி செய்தார்.

4. குழந்தை தாயிடம் ____________________ என நடந்து சென்றது.

5. பிறரின் நலனுக்காகத் தம்மையே ____________________ செய்பவர்கள் மாவீரர்கள்.

6. என் நண்பி தேர்வு எழுதவில்லை. ____________________, அவளுக்கு ஒமிகிரோன் தொற்று ஏற்பட்டுள்ளது.

(6X1=6 புள்ளிகள்)

**3. தடித்த எழுத்திலுள்ள சொற்கள் ஏற்றுள்ள வேற்றுமை உருபையும் அது எத்தனையாம் வேற்றுமை எனவும் எழுதுக.**

| எண் | சொல்லியம் | உருபு | வேற்றுமை |
|---|---|---|---|
| 1. | நாம் நல்ல **நூல்களை** வாசிப்போம். | | |
| 2. | **தங்கையினது** காதணி பளபளப்பாக இருந்தது. | | |
| 3. | தேனிலா வரைந்த **ஓவியத்துக்குப்** பரிசு கிடைத்தது. | | |
| 4. | நல்வழி **ஔவையாரால்** இயற்றப்பெற்றது. | | |
| 5. | **மரத்தின்கண்** குருவி இருந்தது. | | |

(10X½=5 புள்ளிகள்)

**4. பெயராகவும் வினையாகவும் அமைய சொல்லியங்கள் எழுதுக.**

1. **தை**

பெயர்: ______________________________

வினை: ______________________________

2. **முடி**

பெயர்: ______________________________

வினை: ______________________________

(4X1=4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொற்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(6X1=6 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழர் பண்பாட்டைச் சிறப்பாக வெளிப்படுத்தும் நுண்கலைகள் இரண்டு எழுதுக.

 ______________________________

2. நீச்சலில் திறவினையை நிலைநாட்டிய ஈழத்தமிழன் யார்?

 ______________________________

3. தமிழ்மொழியின் சிறப்புகள் இரண்டு எழுதுக.

 ______________________________

4. இந்தியாவையும் ஈழத்தையும் பிரிக்கும் நீரிணையின் பெயர் என்ன?

 ______________________________

5. தமிழர் சிறந்த இலக்கியங்களைப் போற்றினர். இச்சொல்லியத்தில் வந்துள்ள சொல்லிய உறுப்புகளை எழுதுக.

 எழுவாய்: ______________ பயனிலை: ______________

 செயப்படுபொருள்: ______________ அடைமொழி: ______________

6. தோன்றல், கெடுதல் புணர்ச்சிகளுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுகள் எழுதுக.

 தோன்றற்புணர்ச்சி: ______________

 கெடுதற்புணர்ச்சி: ______________

7. வல்லின மெய்யெழுத்துகளை எழுதுக.

 ______________________________

(5X2=10 புள்ளிகள்)

**7. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சிய
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்! - பாவேந்தர் பாரதிதாசன்

1. பாலைப் பொழிந்து தருவது எது?

___

2. 'எனது உயிர்' என்று கவிஞர் எதனைக் கூறுகிறார்?

___

3. இனிப்புச் சுவையுடைய பொருள்கள் இரண்டு எழுதுக.

___

4. இளநீர் எதிலிருந்து பெறப்படுகிறது?

___

(4X1=4 புள்ளிகள்)

**8. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மாமன்னன் எல்லாளன்
2. கல்வியின் சிறப்பு
3. இயற்கைக் காட்சி

உள்ளடக்கக் குறிப்புகள்:

- இயற்கைக் காட்சிகள்
- அவற்றுள் நீங்கள் பார்த்த இயற்கைக்காட்சி
- அக்காட்சியில் பார்த்து மகிழ்ந்தவை

(15 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாந்தன் சீராக வாழ்வதற்கு ஒழுக்கம் அகத்தியமானது. கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி, பொறுமை, நேர்மை, நன்னடத்தை என்பன ஒருவரின் ஒழுக்கத்தைச் சீராக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. வள்ளுவப்பெருமான் ஒழுக்கமானது உயிரைவிட மேலானது என்கிறார். எனவே, மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தை வாழ்விலே கடைப்பிடிக்கவேண்டும். ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்ற பழமொழிக்கேற்ப நாம் சிறுவயதிலிருந்தே பழகிக் கொண்ட நல்லொழுக்கம் எம் வாழ்நாள் முழுவதும் எம்மைச் சிறப்பாக வாழவைக்கும். பிற உயிர்களை வருத்துதல், பொய் பேசுதல், களவு செய்தல், சூதாடுதல், மது அருந்துதல் போன்றவற்றை அறவே ஒழித்து, ஒழுக்கத்தின் உயர்வான நிலையை அடைந்து வையம் போற்ற நாம் வாழவேண்டும்.

1. மாந்தனின் சீரான வாழ்வுக்கு அகத்தியமானது எது?

   ______________________________

2. வள்ளுவப்பெருமான் ஒழுக்கம் எதைவிட மேலானது எனக் கூறுகிறார்?

   ______________________________

3. ஒருவரின் ஒழுக்கத்தைச் சீராக்குவதில் பெரும்பங்கு வகிப்பவை எவை?

   ______________________________

   ______________________________

4. எவற்றை நாம் அறவே ஒழிக்கவேண்டும்?

   ______________________________

   ______________________________

5. இவ்வுரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது?

   ______________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. அஞ்சலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

அன்னைபூபதி வீதி,
மட்டக்களப்பு,
14.04.2022.

என் இனிய நண்பன் பரனுக்கு,

வணக்கம், நலம் நலமறிய ஆவல்.

நான் தமிழ் படிக்கும் பள்ளியில் 10.01.2022 அன்று இலக்கிய மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு இலக்கியமன்றத் தலைவர் தலைமை தாங்கினார். தமிழறிஞர் சேரன் அவர்கள் 'தமிழ் இலக்கிய இன்பம்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரை ஆற்றினார். அவரின் இனிய தமிழ் மழையில் நாம் அனைவரும் நனைந்தோம். இதேபோல உங்கள் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்ற முத்தமிழ்விழா பற்றி எனக்கு அஞ்சல் மூலம் எழுதுங்கள்.

நன்றி.

இப்படிக்கு,
அன்பு நண்பன்
கு.மதிவண்ணன்.

1. அஞ்சலை எழுதியவர் மதிவண்ணன். (    )
2. பரனின் தமிழ்ப்பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. (    )
3. தமிழறிஞர் சேரன் சிறப்புரை ஆற்றினார். (    )
4. மதிவண்ணன் மட்டக்களப்பில் வசிக்கிறார். (    )
5. முத்தமிழ்விழா நடைபெற்ற நாள் 10.04.2022 ஆகும். (    )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 04 | | | |
| 8 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |